# 19-07-2024 செய்தி

## தரவரிசையில் நம்பர் 1 இடம் : தக்கவைத்தது அர்ஜென்டினா

- ஆடவர் கால்பந்து அணிகளுக்கான ஃபிஃபாவின் சர்வதேச தரவரிசையில், அர்ஜென்டினா முதலிடத்தை உறுதி செய்து கொண்டது. ஸ்பெயின் 3 ஆவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.
- சமீபத்தில் தென்னமெரிக்க கண்டத்தில் 16 –ஆவது முறையாக கோபா அமெரிக்கா கோப்பையைக் கைப்பற்றி சாதனை படைத்த அர்ஜென்டினா, தான் இருந்த முதலிடத்தை அப்படியே தக்கவைத்துக் கொண்டது.
- மறுபுறம், ஐரோப்பிய கண்டத்தில் நடைபெற்ற யூரோ கோப்பை போட்டியின் மூலம், 4 –ஆவது முறையாக சாம்பியனான ஒரே அணி என்ற பெருமை பெற்ற ஸ்பெயின், அபாரமாக 5 இடங்கள் முன்னேறி 3 –ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது.

**124 – இல் இந்தியா**

- ஃபிஃபா தரவரசையில் இந்தியா 124 –ஆவது இடத்தை மாற்றமின்றி தக்கவைத்துக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 100 இடங்களுக்குள்ளாக வந்த இந்தியா, முதல் முறையாக 99 –ஆவது இடத்தைப் பிடித்தது. ஆனால் அதற்குப் பிறகு தொடர் சரிவை சந்தித்த நிலையில், ஜுன் மாதம் 2026 உலகக் கோப்பை கால்பந்து போட்டியின் தகுதிச்சுற்றில் 3 –ஆவது கட்டத்துக்கு முன்னேறத் தவறியதால், தொடர்ந்து சறுக்கலை சந்தித்து தற்போது 124 –ஆவது இடத்தில் நீடிக்கிறது. அதுவே, ஆசிய கண்டத்தின் பிரிவில் 22 –ஆவது இடத்தில் உள்ளது. முதல் இடங்களை முறையே ஜப்பான், ஈரான், தென் கொரியா ஆக்கிரமித்துள்ளன.

## சுகாதாரம், வறுமை ஒழிப்பு, கல்வியில் தேசிய சராசரியை விட தமிழகம் முன்னிலை

- நிதி ஆயோக் வெளியிட்டுள்ள 2023–24 நிதி ஆண்டுக்கான 'நிலையான வளர்ச்சி இலக்குகள்' குறியீட்டில் தமிழ்நாடு 13 இலக்குகளில் முன்னிலை வகிக்கிறது.
- மொத்த இலக்குகளில் தமிழ்நாடு பெற்றிருக்கும் மதிப்பெண், தேசிய சராசரியைவிட அதிகம் ஆகும்.
- தேசிய சராசரி மதிப்பெண் 71 –ஆக உள்ள நிலையில் தமிழ்நாடு 78 மதிப்பெண் பெற்றுள்ளது.
- வறுமையின்மை, பட்டினி ஒழிப்பு, ஆரோக்கியம், தரமான கல்வி, பாலின சமத்துவம் உள்ளிட்ட 17 இலக்குகளை நிலையான வளர்ச்சிக் குறியீடாக ஐக்கிய நாடுகள் சபை நிர்ணயித்துள்ளது.
- இந்தியாவில் நிலையான வளர்ச்சி இலக்குகளில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்பாடுகளை நிதி ஆயோக் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டு வருகிறது.
- 2023–24 நிதி ஆண்டுக்கான அறிக்கை தற்போது வெளியாகி உள்ளது.

**நான்கு நிலைகள்**

- 0–49 மதிப்பெண் (ஆசைப்படுபவர்)
- 50–64 மதிப்பெண் (முன்னேற செயல்பட்டுக் கொண்டிருப்பவர்)
- 65–99 மதிப்பெண் (முன்னிலை வகிப்பவர்)
- 100 மதிப்பெண் (சாதனையாளர்) என மாநிலங்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளது.
- இதில் 13 இலக்குகளில் தமிழ்நாடு முன்னிலை பிரிவில் உள்ளது. 11 இலக்குகளில் தமிழ்நாட்டின் மதிப்பெண் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது.
- 2020–21 நிதி ஆண்டில் தமிழ் நாட்டின் மதிப்பெண் 74 –ஆக இருந்தது. தற்போது அது 78 –ஆக உயர்ந்துள்ளது. தேசிய சராசரி மதிப்பெண் 71 –ஆக உள்ளது.
- மலிவான மற்றும் சுத்தமான எரி ஆற்றல் இலக்கில் தமிழ்நாடு 100 மதிப்பெண் பெற்றுள்ளது.
- வறுமை ஒழிப்பில் 92 மதிப்பெண் பெற்று முன்னிலை வகிக்கிறது. வறுமை ஒழிப்பில் தேசிய சராசரி 72 ஆகும்.

**பின்னடைவு**

- பாலின பாகுபாடு இலக்கில் 53 மதிப்பெண், நீர் வளம் இலக்கில் 61 மதிப்பெண் பெற்று 'செயல்படுபவர்' பிரிவில் தமிழ்நாடு உள்ளது. நிலையான நகரங்கள், நில வளம் ஆகிய இரண்டு இலக்குகளில் தமிழ்நாடு தேசிய சராசரியைவிடவும் குறைவான மதிப்பெண் பெற்றுள்ளது.
- நிலையான நகரங்கள் இலக்கில் தேசிய சராசரி மதிப்பெண் 83 ஆக உள்ள நிலையில் தமிழ்நாடு 81 மதிப்பெண்ணும், நில வளம் இலக்கில் தேசிய சராசரி மதிப்பெண் 75 ஆக உள்ள நிலையில் தமிழ்நாடு 72 மதிப்பெண்ணும் பெற்றுள்ளது.

**மகப்பேறு**

- தமிழ்நாட்டில் மகப்பேறு சமயத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதம் 1 லட்சத்துக்கு 54 ஆகவும், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000 –க்கு 13 ஆகவும் உள்ளது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள வரம்புக்குள் உள்ளன.
- கல்வியில் தமிழ்நாடு மிக மேம்பட்ட நிலையில் உள்ளது. உயர்நிலைப் பள்ளியில் மாணவர் சேர்க்கையில் தேசிய சராசரி 57.6 சதவீதமாக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் அது 81.5 சதவீதமாக உள்ளது.

- அதேபோல், கல்லூரி சேர்க்கையில் தேசிய சராசரி 28.4 சதவீதமாக உள்ள நிலையில் தமிழ்நாட்டில் அது 47 சதவீதமாக உள்ளது.
- தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் 81.87% குடும்பங்கள் சுத்தமான குடிநீர் வசதியைப் பெற்றுள்ளன. அதேபோல், 92.8 சதவீத குடும்பங்களில் ஒருவரிடமாவது மொபைல் போன் உள்ளது.
- வேலையின்மை விகிதம் 4.8 சதவீதமாகவும், 15 – 59 வயதுக்குட்பட்டவர்களில் வேலைவாய்ப்பில் உள்ளவர்களின் எண்ணிக்கை 62.3 சதவீதமாகவும் உள்ளது.

## சூரியசக்தி மின் உற்பத்தியில் ராஜஸ்தான் தான் 'டாப்!'

- தமிழகத்தில், சூரிய ஒளி மூலம், 300 நாட்களுக்கு மேல் மின்சாரம் கிடைக்கும், மேலும், இதற்கான மின் நிலையம் அமைக்க, மத்திய அரசு மானியமும் தருகிறது.
- எனவே, வீடுகளில் 1 மெகாவாட்டுக்கு மேற்பட்ட திறனுள்ள அமைப்புகளை நிறுவ, தனியார் ஆர்வம் காட்டுகின்றனர். இதன்படி, தரையில் நிறுவப்பட்டுள்ள அமைப்புகளில், 7,872 மெகாவாட்டும், மேற்கூரையில் 679 மெகா வாட்டிலும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.
- சூரிய மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவியுள்ள மாநிலங்களில், ராஜஸ்தான், 22,415 மெகா வாட் என, முதலிடத்தில் உள்ளது.
- இரண்டாம் இடத்தில், 14,358 மெகா வாட் என குஜராத்தும், கர்நாடகா, 8,819 மெகா வாட் என கர்நாடகமும், முறையே 2 மற்றும் 3ம் இடங்களில் உள்ளன.

## ஐரோப்பிய ஆணையம் மீண்டும் தலைவரானார் உர்சுலா

- ஐரோப்பிய யூனியனின் நிர்வாகப் பிரிவான ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக உர்சுலா வோண்டெர் லெயென் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இது தொடர்பாக ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில், மொத்தமுள்ள 720 உறுப்பினர்களில் 401 பேர் உர்சுலாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.
- 2019–ஆம் ஆண்டு முதல் ஐரோப்பிய ஆணையத்தில் தலைவராக உர்சுலா வோண்டெர் லெயென் பொறுப்பு வகித்து வருகிறார்.
- ஜெர்மனியைச் சேர்ந்த உர்சுலா, அந்த நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சராக முன்னாள் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கெல் அமைச்சரவையில் 2013 முதல் 2019 –ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்துள்ளார்.
- 27 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியன் அமைப்பு உக்ரைன் போர் முதல் பருவநிலை மாற்றம் வரையிலான பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ள சூழலில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவராக அவர் மேலும் 5 ஆண்டுகளுக்குத் தொடரவிருப்பது குறிப்பிடத்தக்கது.

| நிலையான வளர்ச்சி இலக்குகள் | தமிழகம் பெற்ற மதிப்பெண்கள் | | தேசிய தரவரிசை | |
|---|---|---|---|---|
| | 2021 | 2023 | 2021 | 2023 |
| வறுமை ஒழிப்பு | 86 | 92 | 1 | 1 |
| பசி ஒழிப்பு | 66 | 7 | 6 | 7 |
| ஆரோக்கியம், நல்வாழ்வு | 81 | 77 | 3 | 12 |
| தரமான கல்வி | 69 | 76 | 5 | 4 |
| ஆண்-பெண் சமத்துவம் | 59 | 53 | 4 | 10 |
| சுத்தமான நீர், சுகாதாரம் | 87 | 90 | 11 | 12 |
| மலிவு மற்றும் தூய்மையான ஆற்றல் | 100 | 100 | 1 | 1 |
| வேலை, பொருளாதார வளர்ச்சி | 71 | 81 | 4 | 5 |
| தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு | 71 | 67 | 2 | 5 |
| குறைக்கப்பட்ட சமத்துவமின்மை | 74 | 76 | 6 | 8 |
| நிலையான நகரங்கள், சமூகங்கள் | 79 | 81 | 9 | 15 |
| நுகர்வு மற்றும் உற்பத்தி | 78 | 78 | 11 | 12 |
| காலநிலை நடவடிக்கை | 61 | 81 | 11 | 1 |
| தண்ணீருக்கு கீழ் வாழ்க்கை | 11 | 61 | 7 | 3 |
| நிலத்தில் வாழ்க்கை | 63 | 72 | 16 | 19 |
| அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் | 71 | 78 | 17 | 13 |